# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233


கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ புரட்டாதி 1979 ★ இதழ் - 45




## இப்பில் இப்பில்

அதியற்புத பல உபயோகமுள்ள தாவரம் இது. மிக விரைவாக வளர்ந்து நிழல்தருவதோடு புரதச்சத்து நிறைந்த தழைதரும். அதிக சூடுள்ள நெருப்புள்ள விறகைத்தரும். அதிக சத்துள்ள பசுந்தாழ் பசளைதரும் இத்தனை மகிமை வாய்ந்த இந்த இப்பில் இப்பில் இலங்கைவாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

ஆண்டுதோறும் 15 அடி வளரும் என்றால் அற்புத வளர்ச்சி தானே. பிண்ணாக்கிலும் பார்ககச்சத்துள்ள இலை என்றால் சொல்லவா வேண்டும். நட்டு உண்டாக்கியபின் மூன்றாம் வருட முடிவில் ஒவ்வொரு மரமும் இரண்டு கன மீட்டர் விறகுதரும். விறகு அதிக அனல்காலும் தன்மையுள்ளதாகும். இதனைப் பூச்சிகள் புழுக்கள் அதிகந் தாக்குவதில்லை. கடும் வரட்சியையும் தாங்கி நின்று பசுமையாய் வளரும். இதன் ஐந்து இறாத்தல் இலைகள் ஒரு இறாத்தல் செயற்கைப் பசளையின் பலனைத்தரும். இதன் இலையில் 26% வீத புரதம் இருப்பதால் பிண்ணாக்கிலும் பார்க்க இது மலிவும் சிறப்பும் வாய்ந்தது.



யோகக்கலை என்னும் புத்தகத்தை வெளியிட்ட மில்க்வைற் தொழிலதிபர், அதனைத் தம் குரு சுவாமி சச்சிதானந்தரிடம் சமர்ப்பிக்கிறார்.

இப்பில் இப்பில் எல்லா நிலங்களிலும் வளரும். வெறும் வளவுகளிலும் தென்னந்தோட்டங்களிலும் இதனை அதிகமாக நடலாம். இது அவரையினத்தைச் சேர்ந்த தாவரம். இது நைதரசனைச் சேகரிக்கும் தன்மையுள்ளது. இதன் இலைகள் காய்ந்த பின்னரும் சத்துள்ள உணவாகப் பயன்படும். எனவே இதனைச் சேகரித்து வைத்து மழைக் காலத்தில் வைக்கோலுக்குப் பதிலாகவும் மாடுகளுக்கு உணவாகப் பயன்படுத்தலாம். பிலிப்பீன்ஸ் நாட்டினர்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

★ நன்மையும் தீமையும் நமது தேட்டங்களே ★

உ
சிவமயம்



## கடவுள் வணக்கம்

### திருநாவுக்கரசுநாயனுர்

திருக்கச்சியேகம்பம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந் (தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

திருவொற்றியூரிலும், திருவாலவாயிலும், திருவாரூரி லும் திருக்கச்சியேகம்பத்திலும் எழுந்தருளியுள்ள பெருமானே! தாயின் கர்ப்பத்திலே பொருந்திய நாள்முதலாகத் தேவரீருடைய திருவடிகளையே காண்பதற்கு அடியேன் மனம் உருகுகிறது. அடியேனும் பல பிறவிகளில் கிடந்து உழன்று சலித்துவிட்டேன். தேவரீரையன்றி அடியேனுக்கு வேறு ஒருபற்றும் இல்லாமையையும் அறிந்து அடியேனுக்கு இரங்கியருள் புரிவீராக.




### பேதைமை

யாதும் அறியாமை

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.

மனம் அடங்குவதற்குக் காரணமாய நல்ல நூல்களைக் கற்று, அவற்றின் பயனை உணர்ந்த பின்னும், அவற்றைப் பிறரறிய எடுத்துரைத்தும், தான் அடங்கி நடவாத அறிவிலானைப் பார்க்கிலும் அறிவிலார் எங்கும் இல்லை.

**Folly**

There is no greater fool than he who has studied and known and tought and yet does not control himself.

## 1979 செப்ரம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சனி | — | ஆவணி மூலம் |
| 2. | ஞாயிறு | — | ஏகாதசி விரதம் |
| 3. | திங்கள் | — | தெல்லிப்பழை துர்க்காதேவி தேர் |
| 4. | செவ்வாய் | — | பிரதோஷ விரதம் |
| 5. | புதன் | — | நடேசர் அபிஷேகம்<br>செல்வச்சந்நிதி தேர் |
| 6. | வியாழன் | — | பூரணை விரதம் |
| 7. | வெள்ளி | — | மஹாளயபட்ச ஆரம்பம் |
| 9. | ஞாயிறு | — | கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி தினம் |
| 11. | செவ்வாய் | — | கார்த்திகை விரதம்<br>சுப்பிரமணிய பாரதியார் தினம் |
| 12. | புதன் | — | ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி |
| 17. | திங்கள் | — | ஏகாதசி விரதம் |
| 18. | செவ்வாய் | — | பிரதோஷ விரதம் |
| 20. | வியாழன் | — | வல்லிபுர ஆழ்வார் கொடி |
| 21. | வெள்ளி | — | அமாவாசை விரதம்<br>மஹாளய பட்சமுடிவு |
| 22. | சனி | — | நவராத்திரி விரதாரம்பம்<br>பெருமாள் கோயில் கொடி |
| 30. | ஞாயிறு | — | மஹாநவமி - சரஸ்வதி பூசை<br>பெருமாள் கோயில் தேர் |

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### இப்பில் இப்பில்....

இப்பில் இப்பில் இலைகளோடு தவிடும் உப்பும் சேர்த்து நீரிட்டுத் துவைத்துக் கால்நடைகளுக்கு ஊட்டுகிறர்கள்.

இப்பில் இப்பிலைப் பற்றி மில்க்வைற் தொழிலதிபர் இரண்டு ஆண்டுகளாகப் பிரசாரஞ் செய்துவருகிறர். உங்களுக்கு இப்பில் இப்பில் கன்றுகள் தேவையானல் தொழிலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ அசலும் நகலும் ★

உங்கள் அபிமானத்துக்குரிய

**மில்க்வைற் VMK பார்சோப்**

தரமானது.


ஆனல் அதன் அமைப்பில் வேறு சிலர் மேலுறை சுற்றி விற்பனை செய்கிருர்கள்.
மில்க்வைற் VMK தயாரிப்பு என்று எழுதிய எங்கள் மேலுறையைக் கவனித்து வாங்குங்கள்.

நன்றி — மில்க்வைற்

★ சான்ருேனுக்குக் கீர்த்தி கசப்பாய் இருக்கும் ★

முற்றொடர் :

# சூரிய நமஸ்காரம்



தேவாரம், திருவாசகம் ஆகிய திருமுறைகளில் சூரியனைக் குறிக்கும் திருப்பாடல்கள் பலவுள்ளன. அவன் திருநாமங்களாக அருக்கன், அருணன், இரவி, ஒளி, கதிரவன், சுடர், ஞாயிறு, பகலவன், பரிதி, வெய்யவன் முதலிய பெயர்கள் வந்துள்ளன. அன்றி அவன் இயக்கம் உள்ளவன், இருள் நீக்குபவன், ஊழிவரையும் உலவுபவன், உலகுய்ய உதிப்பவன், ஆயிரம் கதிர் உள்ளவன். பகற்பொழுதை உண்டுபண்ணுபவன், ஒளியும் வெப்பமும் உள்ளவன், சிவபெருமானின் அட்டமூர்த்தங்களுள் ஒன்றாய் உள்ளவன். முதலிய கருத்தமைந்த தொடர்கள் பல ஆங்காங்கே வந்துள்ளன.

சிவபெருமான் ஞாயிறாய நம்பன், இரவியுமாய் நின்றார், இரவியாய பேராளன் என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடியருளியுள்ளார்.

திருநாவுக்கரசு நாயனார் ஐந்தாம் திருமுறை இறுதியில் ஆதிபுராணத் திருக்குறுந்தொகை என்னும் பகுதியில் பின்வருமாறு சூரியனைக் குறித்துப் பாடியருளியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்.

அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்க னாவான் அரனுரு வல்லனோ
இருக்கு நான்மறை யீசனை யேதொழும்
கருத்தி னைநினை யார்கல் மனவரே.

திருச்சிற்றம்பலம்

உஷதிருவர்சகத்தில் அருக்கனில் சோதி அமைத்தோன் எனவும், ஞாயிறுக்கு நாள்தோறும் ஒளிதருபவர் எனவும், ஞாயிறு போன்று எழுந்தருள்பவர் என்றும், ஒளியாகி நின்றாயை என்றும் தொடர்கள் வருகின்றன.

சமயப் புலவர்களின் பின்வந்த கவிஞர்கள் எல்லோரும் சூரியனைப் புகழ்துள்ளனர். சூரியோதயத்தைப் பாடுதல் காப்பிய இலக்கணமாயும் இருந்தது. சூரியோதயத்திற் புலவர்கள் தங்கள் கருத்தைத் தற்குறிப்பேற்றம் என்னும் அணி நனிசிறக்கப் பாடியும் உள்ளனர்.

முற்றொடர்:

# அடுக்குமொழி

| | |
|---|---|
| தாங்கிச் சுமந்து | திக்கு திகாந்தம் |
| தாசி வேசி | திக்குத் திசை |
| தாபம் தவிப்பு | திக்கு முக்கு |
| தாய் பிள்ளை | திட்ட வட்ட |
| தாயும் சேயும் | திட்டுந் திடலும் |
| தாரை தப்பட்டை | திட்டு முட்டு |
| தாவிக் குவித்து | திட்ப நுட்பம் |
| தாழ்ந்து குனிந்து | திண்டாடித் திணறி |
| தாழ்ந்து பணிந்து | திண்டு தலையணை |
| தாறு மாறு | திண்டு முண்டு |
| தானமும் தருமமும் | தியங்கி மயங்கி |
| திக்கித் திணறி | திரைந்து சுருங்கி |

திருகல் முருகல்



முற்றொடர் :

ஔவையார் அருளியது என வழங்கும்

## கல்வி ஒழுக்கம்

67. மன்னரா யினு மறைகளை யோது
அரசர்களாயினும் வேதங்களை ஓதுதல் செய்தல் வேண்டும்.

68. மாசறக் கற்றவர் மாநிலமாழ்வார்
குற்றந்தீரக் கற்றவர் பெரிய பூமியை ஆழ்வார்.

69. மிகப்பெருஞ் செல்வம் விளைத்திடுங் கல்வி
கல்வியானது மிகப்பெரியதாகிய செல்வத்தை உண்டாக்கும்.

70. மீசுரக்கொடுத்து வித்தையைக் கற்றறி
அதிகமாகப் பொருளைக் கொடுத்து நீ படித்தறி.

71. மூத்தமிழ் தனக்கு மூப்புமில்லை
இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழைக் கற்பதற்கு முதுமை என்பது இல்லை.

72. மூதறிவுயர்த்துந் தீதிலாக் கல்வி
நற்கல்விகள் பேரறிவில் தலைமையுறச் செய்யும்.

— தொடரும்

உண்மையான ஒரு சொல்லே போதும், உண்மையற்றன எவ்வளவு தொகையானவையெனினும் ஒரு பெறுமதியுமற்றனவாகும். — மகாத்மா காந்தி

★ ஆத்மபோதம் பெற்றவனுக்குச் சமயோசிதபுத்தி வரும் ★

# ★ நாவலர் குருபூசை ★



இவ்வாண்டு டிசெம்பர் பத்தாம் நான் திங்கட்கிழமை நிகழவிருக்கும் நாவலர் குருபூசை அவர்கள் மறைந்த நூறாண்டாண்டு நிறைவைக் குறிப்பதாகும். அவர்கள் மறைந்து நூறாண்டாகியும் நம்மவர் அவர்கள் சொன்ன வண்ணம் முற்றாக வாழத் தலைப்படவில்லை என்றே கூறவேண்டும். யாழ்ப்பாணம், கொழும்பு, சிதம்பரம் முதலிய இடங்களில் அவர்களின் நினைவு விழாக்கள் பெரிய அளவில் நடைபெறும் என எதிர்பார்க்கிறார்கள்.

ஆறுமுகநாவலர் அவர்களைக் குருவாகக் கொண்டவர்கள் பலர். அவர்களுள் சித்தன்கேணி அம்பலவாண நாவலர் என்பார் நாவலர் அவர்களைப் பின்பற்றி வாழ்ந்ததோடு அவர்மீது சற்குருமணிமாலை என்னும் நூறு பாடல்கள் பாடியும் உள்ளார். பாடல்கள் கோவே குருவே எம் ஆறுமுகநாவல சற்குருவே என ஈற்றடியில் முடியும் அமைப்பின. அவற்றுள் மாதிரிக்கு ஒரு பாடல் வருமாறு.

திருவே யருட்செல்வமே சிவமே சிவசிற்சுகமே
மருவே மருவின் மலரே மலர்க்கற் பகவனமே
கருவே யிரித்தெமை யாண்டிடநீயுருக் கண்டனையே
குருவே யெம் ஆறுமுகநா வலசற் குருமணியே

போலிப் புலவர்களை மதிக்காதவரும், ஆறுமுகநாவலர் அவர்களின் பாரம்பரியத்தை நன்கறிந்தவரும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் ஆசிரியப் பிரானாகிய சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அவர்கள் நாவலர் அவர்களை எவ்வாறு மதித்துள்ளார் என்பதை அவரெழுதிய தமிழ்ப்புலவர் சரித்திரம் கூறுகிறது.

"இவருடைய இலக்கியப் பயிற்சி வன்மையை இவரால் அச்சிடப்பட்ட பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, பாரதம், சேதுபுராணம், கந்தபுராணம் முதலிய இலக்கியங்கள் காட்டும்.

இலக்கணப் பயிற்சி வன்மையை இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகை, சேனாவரையம், பிரயோக விவேகம் இலக்கணக் கொத்து முதலிய இலக்கணங்கள் காட்டும்.

நீதிநூல் நியாய நூல்களின் வன்மையையும் சைவ சித்தாந்த சாத்திர வன்மையையும் பெரியபுராண சூசனமும் தருக்கசங்கிரகம் சைவசமய நெறியுரை முதலியனவும் காட்டும்.

பரிசோதன வன்மையை அச்சிட்ட நூல்கள் எல்லாம் காட்டும். செந்தமிழ் வாக்கியத் தொடை வன்மையைத் திருவிளையாடற்புராண வசனம், பெரியபுராண வசனம் முதலியன காட்டும்.

கண்டன வன்மையைச் சண்டமாருதம்போற் சென்று தாக்கித் தலைதனிவிக்கும் சுப்பிரபோதம், போலியருட்பா மறுப்பு, மித்தியாவாத நிரசனம் முதலியன காட்டும்.

செய்யுளியற்றும் வன்மையை அராலிச் சித்திவிநாயகர் விருத்தம் காட்டும்.

வித்தியாதானப் பெருந் தருமச் செயலை இவராலே தாபிக்கப்பட்டு நடந்துவரும் வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையும் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையும் பிறவுங் காட்டும்."

# தொகையகராதி
## (நான்கு)

**அகத்தி**
அகத்தி, செவ்வகத்தி, பேயகத்தி, சீமையகத்தி

**அகராதி**
பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி

**அகவற்சீர்**
நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை

**அகவற்பாவகை**
நேரிசை, இணைக்குறள், நிலைமண்டில, அடிமறிமண்டில

**அச்சம்**
அணங்கு, விலங்கு, கள்வர், அரசன்

**அணிவகுப்பு**
தண்டம், மண்டலம், அசங்கதம், போகம்

**அதிக துன்பந் தருபவை**
மதுபானம், சூது, பரதாரம், வேட்டை

**அந்தக்கரண தேவதைகள்**
சந்திரன், பிரம்மா, வாசுதேவன், உருத்திரன்

**அரசர் கடமைகள்**
பொருள்தேடல், தொகுத்தல், காத்தல், செலவிடுதல்

**அரசர்க்குரிய பண்புகள்**
அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கம்


## மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2, பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2, சலவைப்பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த. பெ. இல 77, யாழ்ப்பாணம்.


★ தன்னலமற்ற சேவையில் தாய்மார் சிறந்தவர்கள் ★

# சிறுவர் ஆண்டுச் சிந்தனைத் தொடர்

## நல்நடை

நல்நடை என்றால் நல்லொழுக்கம் என்று பொருள். அதை நல்வழி என்றும் நன்னெறி என்றும் கூறுவர். அது சிட்டாசாரம். இளைஞரை நல்லொழுக்கமுள்ளவாராக்குவதற்குப் புலவர்கள் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளார்கள், ஒளவையாரின் வழியில் சிறுவரை நல்லவராக்குவதற்கு முனைந்த அரசர் ஒருவர் அவர்களை உலகந் தழுவிய உத்தமராக்குவதற்கு முனைந்தார். அவர் நறுந்தொகை என்ற ஒப்பற்ற நூலையே இயற்றியுள்ளார். கொற்கை என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு தென்னாட்டையாண்ட அதிவீரராமபாண்டியன் அறிஞன், பக்திமான், ஒழுக்கசீலன், வீரன், புலவன் அவருடைய அண்ணனும் அண்ணியும் புலமையுள்ளவர்கள்.

அதிவீரராமபாண்டியன் நைடதம், காசிகாண்டம், கூர்மபுராணம், திருக்கருவைப்பதிற்றுப் பத்தாந்தாதி, திருக்கருவைக் கலித்துறையந்தாதி முதலிய பல நூல்களை இயற்றியவர். திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி கரிவலம் வந்த நல்லூர்ச் சிவபிரான் மேல் இயற்றப் பெற்றது. பக்திரசம் நிரம்பிய இந்நூல் குட்டித்திருவாசகம் எனப்போற்றப்பெறுவது.

கடினமான காவியங்கள்படைத்த அதிவீரராமபாண்டியன் சின்னஞ் சிறுவர் மேற் கருணை கொண்டு அவர்கள் நல்லவராய்ப் பெரியவர்களாய் அறிவாளிகளாய் வரல் வேண்டும் என்று விரும்பி நறுந்தொகை என்னும் குழந்தை இலக்கியத்தை இயற்றினார். நறுந்தொகை என்றால் நல்லனவாகிய நீதிகளின் தொகுப்பு என்று பொருள்தரும். இது வெற்றிவேற்கை எனத் தொடங்குவதால் வெற்றிவேற்கை எனவும் வழங்குகிறது. இந்நூலில் எண்பத்திரண்டு நீதிகள் பொதிந்துகிடக்கின்றன.

குருவே சிவம் எனக்கூறினன் நந்தி என்று திருமூலநாயனார் கூறினாற்போல எழுத்தறிவித்த குருவை இறைவன் என்று நறுந்தொகை கூறுகிறது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனப் படித்தவர்களுக்கு இப்போது பாடஞ்சொல்லும் ஆசிரியனும் தெய்வந்தான் என்று நறுந்தொகை கூறுகிறது.

ஆசிரியன் சொல்லித்தந்த கல்விக்கு ஓர் அழகுண்டு. அது கல்விக்கு அழகு கசடறமொழிதல் என்பதனால் அறியப்படும். அத்தகைய கல்வியைப் பிச்சை எடுக்க நேர்ந்தாலும் புறக்கணிக்காமல் கற்றல் வேண்டும்.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைபுகினும் கற்கை நன்றே

நாம் மூர்க்கரோடு சிநேகம் பண்ணி நண்பர்களாய் இருந்தாலும் அந்த நட்பு உறுதியாக நிலைக்காது. தண்ணீரில் உள்ள பாசி வேரோடி உறுதிபெறுவதில்லை. ஆனால் பெரியமரம் நிலத்தைப் பிளந்து வேர்விட்டு உறுதியாய் நிற்கும். பெரியமரத்தின் உறுதிபோலப் பெரியவர்களோடு நல்லவர்களோடு நாம் கொள்ளும் உறவு உறுதியாய் நிலைக்கும் என்பர்.

நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாதே
ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே.

இனி நல்லவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அதிவீரராமபாண்டியன் உங்களுக்கு அழகாகக் கூறுகிறார். பாலைக்காய்ச்சினாலும் சுவைகுன்றாது. பொன்னைச் சுட்டாலும் ஒளி கெடாது. சந்தனத்தை அரைத்தாலும் மணம் மாறாது. அகிலைப் புகைத்தாலும் துர்நாற்றம் வீசாது. கடலைக் கலக்கினாலும் சேறாகாது. இவைபோல நல்லவர்கள் துன்பங்கள் வந்தாலும் சிறுமையடையாது பெரியவர்களாயே இருப்பார்கள்.

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்ஒளி கெடாது
அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தண்கடல் சேறாகாதே.

## கண்டதும்

முற்றொடர்:

84. கடவுள் உனக்கு ஒரே ஒரு முகத்தைத்தான் கொடுத்தார். நீயோ அதை அடிக்கடி மாற்றிக்கொள்ளுகிறாய்.

85. கடவுள் ஒருவர் தான் உயர்ந்த கணக்கப்பிள்ளை. அவர் எல்லோருடைய கணக்குகளையும் நன்மை தீமை பற்றிச் சரியாகக் குறித்து வைத்திருக்கிறார்.

86. பிரார்த்தனை கடவுளை அடையும் பாதி வழிவரை கொண்டு செல்லும். மத உணர்வு இறைவனின் மாளிகை வாசல் வழி கொண்டுசெல்லும். ஆனால் ஈகை ஒன்றே உள்ளே செல்லும் அநுமதியை அளிக்கிறது.

87. வெறுப்பைக்காட்டுவது அரக்கர் குணம்; மன்னிப்பது மனித இயல்பு, அன்பு செலுத்துவது தெய்வப் பண்பு

88. உன் உணவுக்குத் தகுந்தபடி மனசும், பானகத்துக்குத் தகுந்தபடி குரலும் உனக்கு அமைவதில் வியப்பில்லை.

89. முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். எஜமானனாகும் உயர்வு பின்னர் உனக்குக் கிடைக்கும்.

90. நீ செய்யும் சிறிய முயற்சியும் சமயத்தில் பெரிய சாதனையாய் இருக்கும். சோம்பிக்கிடவாதே.


91. எழுத்திலும் பேச்சிலும் புலமை தோன்றினால் போதாது, புலமையோடு உள்ளொளியும் துலங்க வேண்டும். ★

## கேட்டதும்

ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஈசனுறைந்தால், யார் யாரைப் பகைக்க முடியும்?

— மகாத்மாகாந்தி

★ தூய உள்ளம் இறைவனின் ஆலயம் ★



# பஞ்ச தந்திரம்

பெரிய பாம்பின் வாயிலிருந்து விஷம் கொட்டுகிற மாதிரித் துஷ்டனின் வாயிலிருந்து வார்த்தைகள் வந்து கொண்டே இருக்கும்.

"வெள்ளைமனம் படைத்த அன்னப்பறவை இருட்டிலே ஏரிநீரில் நட்சத்திரங்களின் பிம்பங்களைத் தாமரை மலர்கள் என்று நினைத்துக்கொத்தி ஏமாந்துபோகிறது. பகலிலே தாமரை மலர்களை நட்சத்திரங்கள் என்று கருதிக் கொத்தாமல் விடுகிறது. சூதுவாதுள்ளவரைக் கண்டு உலகமே பயப்படுகிறது.

சந்தனமரத்தில் பாம்புகள் இருக்கின்றன. தாமரைத் தடாகத்தில் கொடிய முதலைகள் இருக்கின்றன. நல்லவன் வீட்டிலும் வம்பர்கள் இருக்கிறார்கள்.

நேரில் கண்டால் அன்பாகப் பேசி மறைவிலே இகழ்ச்சியாகப் பேசுபவன், மேலே பாலாடை மிதக்க உள்ளே விஷம் நிரம்பியிருக்கும் குடம் போன்றவன்.

ஆரம்பத்தில் மிதமிஞ்சிய உபசாரமும் பாராட்டும் பணிவும் காட்டி, இடைக்காலத்தில் காய்க்காத அழகுப் பூப்போன்ற பயனற்ற வார்த்தைகள் பேசி, இறுதியில் துரோகம், அவமானம், அருவருப்பு, தீமைகளைச் செய்வது இழிந்தவர்களின் போக்கு.

## வரவேற்பும் பாராட்டும்

இலங்கையில் பிரபல வர்த்தகரும் சிறந்த சமூகசேவா சோதியுமான திரு. சி. சின்னத்துரை அவர்கள் அரசினரால் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பெற்றுள்ளார். இவரின் அன்பையும் ஆதரவையும் பொதுமக்கள் நன்கு பாராட்டுவர். இவருக்குப் பலவிடங்களிலும் பாராட்டு வைபவங்கள் நிகழ்ந்துள்ளன. அண்மையில் 25-8-79 சனிக்கிழமை மில்க்வைற் தொழிலதிபர் தமது மணிமண்டபத்தில் மங்களகரமான வரவேற்பும் பாராட்டும் நடத்திய போது வர்த்தகர்கள், வங்கியாளர்கள், பிரமுகர்கள் பலர் கூடிச் சிறப்பித்தார்கள். சின்னத்துரை அவர்களின் சேவை எங்கள் நாட்டுக்குப் பெரிய வரப்பிரசாதம். அவர் வாழ்க. அவர் தொண்டு வெல்க.

அகந்தையின் மறைப்பு இருளின் மறைப்பிலும் மிகவும் அதிகமான மறைப்பைக் கொடுப்பது.

— மகாத்மாகாந்தி

## சைவம் வளரத் தங்கப்பதக்கம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாக் காலத்தில் நடைபெறும் சைவ சமய அறிவுப்போட்டியை நடத்துகின்றவர்களுக்கு ஆதரவாக நின்று ஊக்கிவரும் மில்க்வைற் தொழிலதிபர் க. கனகராசா அவர்களும், அண்ணா தொழிலக உரிமையாளர் எஸ். பி. நடராசா அவர்களும் தங்கப் பதக்கங்கள் ஆண்டுதோறும் உபகரிக்கும் முறையில் இம்முறையும் அமைதியாக உதவிப் பாராட்டப் பெற்றுள்ளார்கள். வசதியுள்ள பிரமுகர்கள் இன்னும் மேலதிக பரிசுகள் வழங்க முன்வருவார்களாயின் இருபத்தைந்து பரிசுகள் வழங்கலாந்தானே.

## யோகாசனத்தின் மகிமை

மில்க்வைற் தொழிலதிபருக்கு நாள்தோறும் வருகின்ற பாராட்டுக் கடிதங்களுள் யோகாசனத்தால் நன்மையடைந்த ஆண், பெண் இருபாலாரும் தாம் தாம் அடைந்த நன்மைகள் பற்றி எழுதினவற்றைப் படிக்குந்தோறும் மகிழ்ச்சியாயிருக்கிறது. யோகாசனம் தாங்கள் பழகியதால் வைத்தியச் செலவு குறைந்துவிட்டதோடு தாம் கூடிய நேரம் வேலைகள் செய்யக்கூடியதாக இருக்கிறதாம்.

இவை யாவும் உடலளவில் அமைவின் உயிரளவில் ஆத்மானந்தம் அமையும்போது இன்னும்பல நன்மைகள் உண்டாகும். நல்லதையே நினைக்கவும் சொல்லவும் செய்யவும் தூண்டும் என்று பெரியார்கள் தங்கள் அனுபவத்தைக் கூறுகிறார்கள்.

## மலேசியாவில் மகத்தான பணி

மலேசிய வாசி உரும்பராய் உயர்திரு. சின்னத்தம்பி சின்னையா அவர்கள் மாரியம்மன் கோயிற் கொடிமரத்துக்குச் செப்புக்கவசம் செய்வித்து உதவியுள்ளார். இக்கவசம் பொருத்தப்பெறும் வேளையில் 'மகோற்சவத்தில் கொடிமரம்' என்னும் நூல் வழங்கப்பெறும். இதனைச் சிவநெறிப் புரவலர் மில்க்வைற் தொழிலதிபர் தமது செய்தியாசிரியர் க. சி. குலரத்தினம் அவர்களைக் கொண்டு எழுதுவித்துள்ளார். ★

## கோயில்





தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயம் சென்ற 24-8-79 வெள்ளிக்கிழமை கொடியேற்றமாகி 4-9-79 செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவம் நிகழும். திருவிழா வேளைகளில் இங்குத் தொண்டர்கள் சிறந்த பணி புரிகிறார்கள். இவர்களைக் கணித்துக் கௌரவித்த தொழிலதிபர் திரு. கனகராசா இவர்களுக்கு விசேட அடையாளப் பட்டி வழங்கிச் சிறப்பித்துள்ளார். ★

★ மனச்சாந்தி பெறுவதற்குச் சேவையே வழி ★

முற்றொடர்:

# சோல்பரி கண்ட யாழ்நகர் சுவாமி



## வேதாந்தம் சித்தாந்தம்

வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் ஒரு முரண்பாடு இருந்து வந்தது. அது இன்றுவரை நிலவி வருகிறது. இம் முரண்பாடு ஏனைய பல முரண்பாடுகளைப் போல விளக்கக் குறைவால் உண்டானது. இருசாராருள்ளும் உண்மையை முற்றாக உணர்ந்து கொள்ளாதவர்கள் முரண்பாட்டை உண்டாக்குகிறார்கள். ஒருவழியிற் பார்த்தால் இரண்டுக்கும் ஒற்றுமை வேற்றுமை பார்க்கவே கூடாது.

வேதாந்தம் என்பது பொருண்மை சாராத தத்துவ விளக்கக் கோட்பாடேயாகும். அது பொருண்மை சாராத வழியுமாகும். அதனை மிகச்சிலரே தம் நுண்மாண் நுழைபுலனால் நுணுகி ஆராய்ந்து பின்பற்றியுணரலாம். அது விவேகிகளுக்குரிய ஒருதுறை.

சைவ சித்தாந்தம் என்பது பொருண்மை சாராத் தத்துவமாகவும் சமயமாகவுமுள்ளது. அது எல்லோருக்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது. அதனைப்பின் பற்றுவோர் வெவ்வேறு அறிவுத்தரமும் தகுதியும் நிலையும் உள்ளவராயும் இருக்கலாம்.

வேதாந்தம் ஒரு சிறப்புப் பட்டத்துக்குரிய பயிற்சி போன்றதாகும். சித்தாந்தம் உயர்ந்த பயிற்சியேயாயினும் அஃது அரிவரி தொடக்கம் பல்கலைக் கழகம் வரையுள்ள படிப்புப்போன்றதாகும். இருதுறையிலும் பயின்று பாண்டித்திய முள்ளவர்கள், இரண்டுதுறைகளின் இறுதிநோக்கம் உண்மையை உணர்தல் ஒன்றேயாதலால் அங்கே எவ்வித வேறுபாடும் இல்லை எனக்கூறுவர். உண்மை ஒன்றே.

வேதாந்தம் உலகத்தை மேலிருந்து - கடவுளருளிலிருந்து நோக்கிறது. சித்தாந்தம் தனிப்பட்டவரின் - உயிரின் தன்மையிலிருந்து உலகை நோக்கிறது. இரண்டும் சரியானவை. இரண்டும் பிழையானவை. ஏனெனில் மிகமிக மேலானதை வாக்கினால் வசனிக்கமுடியாது. அது மனத்திற்கும் அறிவின் திறத்திற்கும் அப்பாற்பட்டது.

''பேசினாற் பொய் கூறுவாய்'' (எனவே பேசாமல் இரு.) பேசா அநுபூதி பிறந்ததுவே. என்பது பெரியோர் வாக்கு.

— தொடரும்

# கிழவனாரின் பெருந்தொண்டு

தளர்ச்சி மிகுந்த கிழவனார் ஒருவர் மயிலிட்டி வடக்கிலிருந்து தாம் உண்டாக்கிய மலைவேப்பங் கன்றுகளைத் திருக்கேதீச்சரத்துக்கும் பிறவிடங்களுக்கும் கொடுக்கும்படி தந்துள்ளார். இவருக்கு உங்கள் சார்பில் எங்கள் நன்றி.

# முருங்கைத்தடி

வவுனியாவில் ஏழைகள் குடியேறியுள்ள இடங்களில் உடனுணவுக்காக முருங்கைத்தழையேனும் கிடைக்கவேண்டும் என்று கருதி ஆயிரக்கணக்கான முருங்கைத் தடிகளை நாட்டுவதற்கு இராஜசுந்தரம், சந்ததியார் முதலானோர் செய்த முயற்சியை நிறைவுசெய்வதற்கு மில்க்வைற் விடுத்த வேண்டுகோள் பயன் தந்துள்ளது. கைவிசேடமாக ஆனைக்கோட்டை வித்துவான் வ. கந்தையா அவர்கள் ஏராளமான தடிகள் தந்துள்ளார்கள். இவருக்கு நன்றி. இன்னும் ஆயிரக்கணக்கான தடிகள் தேவை. இன்னும் மரவள்ளித் தடிகள் மேலதிகமாக வைத்திருப்பவர்கள் தந்துதவுவார்களாக.

# இப்பில் இப்பில்

இப்பில் இப்பில் ஒரு நூதனமான மரம். விரைவாக வளரும் இம்மரத்தில் தழை ஆடு மாடுகளுக்குப் புரதச் சத்து நிறைந்த உணவு. சிறந்த பசுந்தழை உரம். இது வேகமாக வளர்வதால் இது விறகுக்கும் பயன்படுத்தப் படக்கூடியது. கன்றுகள் தேவையானோர் மில்க்வைற் தொழிலகத்துக்கு வாருங்கள்.

# ★ பனம் விதைகள் ★

வழமை போல இவ்வாண்டும் எங்கள் பனை மகோற்சவம் பெருவிழாவாக நடைபெறும். அடுத்துவரும் நவராத்திரி விழாக்காலத்தில் நாம் பனம் விதைகளைக் கொண்டும் கொடுத்தும் கொண்டாடுவோம். ஏராளமான அன்பர்கள், ஆதரவாளர்கள், கல்லூரி அதிபர்கள் பனம் விதைகள் உபகரிப்பதாக எழுதியுள்ளார்கள். அவர்களுக்கு எம்நன்றி.

கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு தேர்தல் திணைக்களம், முதலான இடங்களின் மேலதிகாரிகள் ஆயிரக்கணக்கான பனம் விதைகளை நாட்டப்போவதாக விண்ணப்பித்துள்ளார்கள்.

இம்முறையும் உங்களிடம் பனம் விதைகளுக்கு இரு கரங்களையும் ஏந்திக் கேட்கின்றோம். தாருங்கள் நாங்கள் கொண்டு சென்று கொடுப்போம், நாட்டி வளர்ப்போம்.

**பனையை வளர்ப்போம் பயனைப்பெறுவோம்.**

என்னும் கோஷத்தை மறந்து விடாதீர்கள்.

**மில்க்வைற்**

காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தபாற்பெட்டி இல. 77.

# பொம்மைவெளி பசுமையாகும்

முன்னர் யாழ்ப்பாணம் பொம்மை வெளியிற் குடியேறிய முஸ்லீம் மக்களுக்கு மரங்கள் விதைகள் உபகரித்த தொழிலதிபர் அண்மையில் அங்குள்ள குளத்தைச் சிரமதான முறையில் ஆழமாக்குவதற்கான ஆயுதங்களை உதவியுள்ளார். ஆயுத உதவியை நல்லமுறையில் பயன்படுத்தும் முஸ்லீம்களின் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

★ சுருங்கச் சொல்லுதல் பெரியோரின் செயல் ★

## மலேசியாவில் ஓர் அதிமனிதன்

உலகப்புகழ்பெற்ற கலாவிநோதர் ஆனந்தக்குமாரசுவாமி அவர்களைப் பற்றியும், அவர் தந்தையார் சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களைப்பற்றியும் விரிவான பெரிய நூல்கள் எழுதிய துரைராசசிங்கம் அவர்கள் உண்மையில் ஓர் அதிமனிதனேதான். நாற்பத்தையாண்டுகள் நல்லாசிரியராய்ப் பணிபுரிந்த இந்த அதிசய மனிதன் முப்பத்தாறு நூல்களும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளும் எழுதியுள்ளார் என்றால் ஆச்சரியப்படவேண்டிய செயல்தான்.

சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் மந்திரிகளாயும் பிரமுகர்களாயும் உள்ள பலரை இவர் உத்தமமான மனிதராக்கியுள்ளார் என்றால் அந்தப் பெருமை இவரை உருவாக்கிய புலோலியூர்ச் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களுக்கே உரியது. சைவப் பெரியார் மானிப்பாய் இந்துக்கல்லூரி, சுளிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆகிய கலா நிலையங்களிற் கற்பித்த அவ்வப்போது அவரைப் பின்தொடர்ந்துபோன இயல்பில் இவர் மேரியின் ஆட்டுக்குட்டியேதான்.

இன்று தமது எழுபத்தையாண்டுப் பருவத்திலும் தாமே தமது வீட்டுவேலைகள் எல்லாவற்றையும் செய்வதோடு வெளியே சென்று பொருள் பண்டம் வாங்கிவரும்போதெல்லாம் நடமாடும் கலைக்களஞ்சியம் எனக் கொண்டாடப்பெறுகிறார். இந்த எளிய வாழ்க்கை முறை இவருக்குச் சிவபாதசுந்தரம் அவர்கள் பழக்கிவிட்டதாகும் என்பதை மலேசியர் பலர் அறிவார்களோ தெரியாது. நாகரிகம் மிக்குயர்ந்த மலேசியாவில் சாதாரண மனிதனாக நடமாடும் இந்தக் கிழவன், கிழவனல்லர். இவர் ஆற்றலும் துடிப்பும் அறிவும் படைத்த இளைஞனேயாவர்.

சமயம், கலை, கலாசாரம், மொழி முதலியவிடயங்களில் பாண்டித்தியம் பெற்ற இப் பெருமகனார் உள்நாட்டு வரலாற்றையும், ஊர்பெயர் இடப்பெயர் முதலியவற்றையும் நம்பகமாக வெளியிடுபவர். முன்னொரு காலத்தில் அகன்ற இந்தியா அல்லது பரந்த பாரதம் எனத்தகும் இந்திய நாட்டின் இணையில்லாத கலாசாரத் தொடர்புகள் மலேசியாவில் குடிபுகுந்து ஒளியூட்டிய வரலாற்றையெல்லாம் ஆதாரபூர்வமாக அறிந்து வெளியீட்டுவருபவர் வேறு யார்?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு மலேசியாவில் 1904-ஆம் ஆண்டில் பிறந்த இவர் 1925 ஆம் ஆண்டிலேயே எழுத்தாளரானார். மலேசியாவில் பகாங் பிரதேசத்திலே ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய காலத்தில் இவர் விசேட படிகளும் உணவுச் செலவும் இன்னபிறவும் கிடைக்கப்பெற்றுப் பின்தங்கிய அந்த இடத்தில் மகத்தான பணி புரிந்தார் என்று மலேசியப் பத்திரிகைகள் புகழ்ந்துள்ளன. எங்கள் ஈழத் தமிழன் இங்ஙனம் சிறப்புற்று வாழ்வதெல்லாம் எங்களுக்கும் பெருமைதானே. இளந்தலைமுறையினர் பின்பற்றவேண்டிய பெரியவர்களுள் துரைராசசிங்கம் ஐயா அவர்களும் ஒருவர்.

துரைராசசிங்கம் 700 பக்கமளவில் வெளிவராதிருக்கும் தமது பாரிய படைப்பை மிகவிரைவில் வெளியிடவேண்டும் அமெரிக்கர், கனேடியர், ஐரோப்பியர், இந்தியர், இலங்கையர், மலேசியர் இன்னும் எத்தனை எத்தனை நாட்டவர்கள் என்று கணக்கிட முடியாதவர் பலர் இந்நூல் எப்போது வெளிவரும் எனக் காத்திருக்கிறார்கள். ஊக்கங்குறையாத ஐயா அவர்கள் இன்னும் பல நூல்களை உருவாக்குவார்களாக.

வாழ்க துரைராசசிங்கம்
வளர்க அவர் பணிகள்! ★

## சர்வதேசச் சிறுவர் ஆண்டு

1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது
2. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்
3. தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை
4. பிள்ளை என்றால் பேயும் இரங்கும்
5. சிறு பிள்ளை இல்லாத வீடு வீடல்ல
6. பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு
7. உண்ட பிள்ளை உரம் பெறும்
8. பாக்கியவான் பிள்ளை முகத்தில் தெரியும்
9. பிள்ளைப் பெற்றுக் கெட்டவள் இல்லை
10. குழந்தை வாக்குத் தெய்வ வாக்கு
11. தாய்க்கு ஆகாதபிள்ளை ஊருக்கு ஆகுமா?
12. இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து
13. ஆணை அடித்து வளர் பெண்ணைப் போற்றி வளர்
14. ஆண் பிள்ளைகள் ஆயிரம் பேராலும் ஒத்திருப்பர்
15. இட்டதெல்லாம் பயிரா பெற்றதெல்லாம் பிள்ளையா?
16. இளமையில் முயற்சி முதுமையில் காக்கும்
17. உத்தமனுக்கு எத்தாலும் கேடில்லை
18. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்
19. எண்ணெய் செலவொழிய பிள்ளை பிழைத்தபாடில்லை
20. ஏவா மக்கள் மூவா மருந்து
21. ஒரு பிள்ளை பிள்ளையல்ல ஒரு மரமும் தோப்பல்ல
22. கல்வியில்லாச் செல்வமும் கற்பில்லா அழகும் பிரகாசிக்கா
23. கற்றவனுக்குமயிரத்தனைகல்லாதவனுக்குமலையத்தனை
24. குழந்தைக் காய்ச்சலும் குண்டன் காய்ச்சலும் பொல்லாதவை
25. சிறுமையிற் கல்வி சிலைமேல் எழுத்து ★

## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. ஸ்பிக்னோமனோ மீட்டர் 2. டமாஸ்கஸ் 3. பொஸ்ரன் 4. றையோடி யெனரோ 5. கம்பியா 6. கோதாவரி 7. உவிஸ்கி 8. ருசியா 9. மீன் 10. பம்பாய் 11. சாக் கடல் 12. ரெக்சாஸ் 13. வங்காளம் 14. தீப்பறவை 15. அபின் 16. டென்மார்க் 17. குளுகோஸ் 18. பெல்சியம் 19. எல்க் 20. ஷாமானிசம் 21. பொட்டாசியம் காபனேட் 22. லக்ரோமீட்டர் 23. யா 24. லினற் 25. லத்தீன்

★ சமுத்திரத்தின் மகத்துவம் நீர்த்துளியிலும் உண்டு ★

முற்றொடர்:

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| சுமங்கலம் | — | நன்மை |
| சுமதி | — | நல்லறிவுள்ளவள் |
| சுமரணம் | — | உணர்ச்சி |
| சுயபாஷை | — | தாய்மொழி |
| சுயம் பாகம் | — | தானே சமைத்தல் |
| சுயம்பு | — | தானுயுண்டான மூர்த்தம் |
| சுயம் வரம் | — | தான்விரும்பும் மணம் |
| சுரங்கம் | — | கீழறை |
| சுரதம் | — | சேர்க்கை |
| சுரம் (ஜ்வரம்) | — | காய்ச்சல் |
| சுரம் (ஸ்வரம்) | — | இசை |
| சுருதி | — | மறை (ஒலி) |
| சுரோத்தம் | — | காது |
| சுலபம் | — | எளிது |
| சுலோகம் | — | செய்யுள் |
| சுலோசனம் | — | கண் |

## அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

அன்புள்ள இடத்தில் அச்சம் இல்லை.
கொடைகள் எல்லாவற்றிலும் மேலானது அன்பு.
எதையும் வேண்டாதவனிடம் சாந்தி உண்டாகிறது.
அண்டத்து விளக்கு உள்ளத்திலும் ஒளிவிடுகிறது.
முடிவான நிலையைத் தட்சிணாமூர்த்தியும் பேசவில்லை.
மெய்யறிவு கட்டுப்பாட்டோடு கூடியிருப்பது.
மனதை அடக்கியதன் அறிகுறி நாவடக்கம்.
சத்தியம் ஆயிரம் அசுவமேத யாகத்திற் சிறந்தது.
பதவி மோகமில்லாதவனை எல்லோரும் அடிபணிவர்.
உயர்வு தாழ்வு என்பன மனிதனின் கற்பனை.
அச்சம் உள்ளவனிடம் குறைபாடு இருக்கும்.

### மநுதர்மம்

உண்மை, அறம், ஒழுக்கம், தூய்மை உயர்வு தருவன.
வாயடக்குதல் என்பது வாய்மையுடைமை.
கையடக்கம் என்பது தீவினைபுரியாமை.
வயிறடக்கம் என்பது கண்டது தின்னாமை.
வீணாகச் சுற்றித்திரிதல் துன்பத்துக்கு வழி.
பிறர் மனைவியை ஆவலுடன் நோக்குதல் பெரும்பழி.
பெரியவரைத் துன்புறுத்தாதவனிடம் பாவங்கள் வாரா.
வேலைக்காரரால் இடர் வந்தால் பொறுத்துக்கொள்க.
பூனை வஞ்சகம் நிறைந்த பிராணி.
கொக்கு கொலைக் கருத்துள்ள பறவை.

## Divine Life for Children



Swami Sivananda

### God Loves you

God loves you. He gives you many good things. He gives you food to eat and clothes to wear. He has given you ears to hear, eyes to see, a nose to smell, tongue to taste, hands to feel and work and legs to walk.

You cannot see god with your fleshy eyes, but he sees you. He takes care of you. He knows all that you do.

He is very kind to you. Love him. Praise him. Sing His name and glory. Pray to Him to keep you away from all sins. He will be pleased with you. He will bless you.

முற்றொடர்:

## இலக்கியச் சொல்

(அ. கு.)

| | | |
|---|---|---|
| 126. இகபரம் | — | இம்மை மறுமை |
| 127. இகம் | — | இவ்விடம் |
| 128. இகல் | — | பகை |
| 129. இகழ்தல் | — | நிந்தித்தல் |
| 130. இங்கண் | — | இவ்விடம் |
| 131. இங்கிதம் | — | கருத்து |
| 132. இங்ஙனம் | — | இத்தன்மை |
| 133. இசித்தல் | — | முறித்தல் |
| 134. இசை | — | ஒலி |
| 135. இட்டிடை | — | துன்பம் |
| 136 இடத்தல் | — | பெயர்த்தல் |
| 137. இடபம் | — | எருது |
| 138. இடர் | — | துன்பம் |
| 139. இடித்துரை | — | உறுதிமொழி |
| 140. இடும்பை | — | துன்பம் |
| 141. இடைக்கழி | — | வாயில் |
| 142. இடையுவா | — | பௌர்ணிமை |
| 143. இடையூறு | — | தடை |
| 144. இணக்கம் | — | இசைவு |
| 145. இணர் | — | பூங்கொத்து |

— தொடரும்

★ இறைவனது நியதியே இயற்கை நடைமுறை ★

## உலக நீதி

## The Universal Moral Precept

### காப்பு

உலகநீதி புராணத்தை உரைக்கவே
கலைகளாய் வருங் கரிமுகன் காப்பு

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போக்விட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

### பொழிப்புரை

உலகநீதி என்னும் பழஞ்செய்திகளைச் சொல்லுதற்கு வேதம் முதலிய நூல்களாலும் அறியவொண்ணாத விநாயகக் கடவுள் காப்பாவர்.

எக்காலத்தும் இடைவிடாது கல்விகற்க வேண்டும். நன்மைதரும் சொற்களையே கூறுதல் வேண்டும். பெற்ற தாயை எக்காலத்தும் நினைந்து போற்றுதல் வேண்டும். தகுதியில்லாதவரிடத்து எவ்வகைச் சம்பந்தமும் கூடாது. ஒருவரைக் கண்டபோது புகழ்ந்துபேசிக் காணாதவிடத்தில் இகழ்ந்து பேசுதல் கூடாது. குறவர் மகளாகிய வள்ளியம்மையின் கணவனாகிய முருகக் கடவுளை நெஞ்சே நீ வாழ்த்துவாயாக.

### INVOCATION

May the Lord whom sciences cannot perceive, the elephant faced Ganesha be my help, when I sing these words of Universal moral precept.

Do not neglect your daily study.
Do not speak ill of anyone.
Do not neglect your mother.
Do not associate with evil doers.
Do not go to forbidden places.
Do not speak ill of any one behind his back.

Oh my heart praise Him mounted on the peacock the wedded lord of lovely Valli, the daughter of the strong shouldered hillmen called Kuravas.

(T. B. K.)

## மாணவ மாணவியருக்கு ஒரு வேண்டுகோள்

அடுத்துவரும் நவராத்திரி தினங்களில் உங்கள் கையால் மரம் நாட்டும் பணியைச் செய்யுங்கள். உங்களுக்கு வேண்டிய மரங்களை நாங்கள் தந்துதவுவோம்,

## உங்களுக்குத் தெரியுமா?

— விடைகள் வேறிடத்தில் —

1. இரத்த அமுக்கத்தை அளவிடுங் கருவி
2. சிறியா நாட்டின் பழைய தலைநகர்
3. அமெரிக்காவில் பெரிய மீன்பிடித்துறை
4. உலகில் மிகப்பெரிய இயற்கைத் துறைமுகம்
5. நிலக்கடலை அதிகம் பயிராகும் நாடு
6. ஏழு வழிகளால் கடலில் கலக்கும் இந்திய ஆறு
7. அயர்லாந்திற் செய்யப்படும் மதுபானம்
8. பிளவெஸ்கி அம்மையார் பிறந்த நாடு
9. மூக்கினால் சுவாசிக்காத பிராணி
10. இந்தியாவிற் பஞ்சு ஏற்றுமதியாகும் துறை
11. உப்புத்தன்மை அதிகமுள்ள கடல்
12. அமெரிக்க மாகாணங்களில் மிகப்பெரியது
13. இந்தியாவில் சணல் அதிகம் விளையும் பகுதி
14. மிகப்பெரிய முட்டை இடும் பறவை
15. பம்பாயில் உண்டாக்கப்படும் மஸ்துப்பொருள்
16. ஐரோப்பாவில் நதி இல்லாத நாடு
17. பழரசத்தாற் செய்யப்படும் சீனி
18. ஐரோப்பாவிற் குடிசனமடர்ந்த நாடு
19. மிக உயரமான மானினம்
20. எஸ்கிமோ சாதியாரின் சமயம்
21. கண்ணாடியைக் கடினமாக்க உபயோகமாவது
22. பாலில் உள்ள வெண்ணெயை அளவிடுங்கருவி
23. பல பறவைகள் போலக்குரல் எடுக்கும் பறவை
24. பாடும் பறவை
25. உரோமராச்சியத்தின் அரசாங்க மொழி

## மறைந்த மேதையின் மங்காப்புகழ்

மனித நாகரிகத்தில் இரும்புக் காலம் என்பதும் ஒன்று கல்லையும் மண்ணையும் கண்டு பழகிய மனிதன் இரும்பின் உபயோகத்தைப் பயன்படுத்தியமை அவனை வெகுவாக உயர்த்திவிட்டது, யாழ்ப்பாணத்தில் இரும்புத் தொழில் நல்லமுறையில் அமையவும் முன்னேறவும் வழிவகுத்தவரின் பரம்பரையில் வந்து 25 ஆண்டுக் காலம் தொழிற்சாலையை அகலித்துப் பெருமளவில் உற்பத்தியைப் பெருக்கி, இறக்குமதியாகும் தயாரிப்புக்களிலும் தரமான திறமான உற்பத்திகளைச் செய்த பெருமைக் குரியவர் இன்றில்லை.

பொன்னுத்துரை
என வழங்கிய
### கனகசபை வல்லிபுரம்

நீர்வேலி காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்கத்தைக் கட்டியெழுப்பிய கனவான். அவர் 26-7-79 இல் மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடையாதவரில்லை. அவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். ★

★ துன்பத்தைப் பொருட்படுத்தாமையே பொறை ★



## ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய

# இலங்கைப் பூமிசாத்திரம்

இது
பூகோள சாத்திர பத நிருத்தியோடும்
பாடசாலை மாணுக்கர்களுக்கு
உபயோகமாகும்படி
செய்து
சென்னபட்டணம்
வித்தியானுபாலன யந்திரசாலையில்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டது

இத்தகைய நூலின் இரண்டாம் பதிப்பு 1883-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதன் விலை 32 சதம். இதில் ஒரு பிரதியைக் கண்டோம்.

இற்றைக்கு நூற்றுண்டுகளுக்கு முன்னர் ஆரம்ப வகுப்புக்களில் பூமிசாத்திரங் கற்பித்த முறைக்கிணங்க இந் நூல் வெளிவந்துள்ளது. இதில் அறிவித்தல் என்னும் பகுதியில் அக்காலத்து முறையை அறியக்கூடியதாக இருக்கிறது.

1. பிள்ளைகள் பெரிய எழுத்திற் பதிப்பிக்கப்பட்ட பாடங்களை நெட்டுருப்பண்ணி ஒப்பித்தல் வேண்டும். சிறிய எழுத்திற் பதிப்பிக்கப்பட்ட பாடங்களைப் பலதரம் வாசித்துக் கொள்ளல் மாத்திரம் போதும்.

2. உபாத்தியாயர், பிள்ளைகளுக்குப் பூமிசாத்திர பதங்களை வெளிப்படை வசனத்திஞலும், உதாரணங்களிஞலும். நன்ருக விளக்கல் வேண்டும்.

3. பூகோள இரேகைகளுக்கு உதாரணங் காட்டுதற் பொருட்டுப் பூமியுருண்டை இல்லையாயின், சிச்சிலிப் பழமேனும் விளாம்பழமேனும் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

4. பிள்ளைகள் தாங்கற்கும் பள்ளிக்கூடம் இருக்கின்ற மாகாணமே முதற் கற்கத்தொடங்கல் வேண்டும்.

5. படம் வைத்துக்கொண்டு அதிலே ஒவ்வோரிடமும் காட்டல் வேண்டும். படத்தில் இடங்காட்டும் விஷயத்திலே பிள்ளைகள் ஒருவரை ஒருவர் விஞவும் படி செய்தல் வேண்டும்.

6. இன்ன ஊரினின்றும் இன்ன ஊருக்கு எப்படிப் பிரயாணஞ் செய்யப்படும் என்னும் விஞவுக்கு, பிள்ளைகள் படத்தைப் பார்த்து வழியில் இடையிடையே உள்ள ஊர்களைச் சுட்டிக்காட்டி விடைகொடுக்கப் பயிலல் வேண்டும்.


## நீம் சுகாதார தூபம்

வேப்பம் விதை, சாம்பிராணி, குங்கிலியம், அகில், சந்தனம் இன்னும் பல மூலப்பொருள்கள் சேர்த்துத் தயாரித்த

நீம் சுகாதார தூபம்

வீடுகளில் மங்களகரமாகப் புகைக்க உபயோகமாவது. அன்றி ஈ, கொசு, நுளம்பு, முதலியவற்றையும் நீங்கச்செய்வது. உங்கள் வசதிக்காகச் சிறிய பைக்கற்றுகளில் கிடைக்கும்.


## சுகாதார வாரம்


(சுவாமி சிவானந்தர் குப்புசுவாமி என்னும் பெயர் பெற்ற வைத்திய கலாநிதி. அவர் சுகாதார சம்பந்தமாக அதிகம் எழுதியுள்ளார். அவற்றுள் இப்போது ஒரு பந்தியை அறிவோம்.)

### உணவுக் கோளாறுகள்

குடலை நன்முறையில் இயங்கத் தூண்டாத உணவு. உயிர்ச்சத்து என்னும் விற்றமின் இல்லாத உணவு, தண்ணீர் அம்சம் இல்லாத வரண்ட உணவு, காய்கறி கீரை வகைகள் சேராத உணவு வயிற்றுக் கோளாறுகளை உண்டாக்கும். அன்றி அசுத்தமான நீர் ஆபத்தான கோளாறுகளை உண்டாக்கிவிடும்.

★ நெடுநேரம் ஒரேநிலையில் உட்கார்ந்திருத்தல்
★ மனதை நோகச்செய்யும் உணர்ச்சிகள்
★ மலம் கழிப்பதை அடக்கி வைத்திருத்தல்
★ இறுக்கமான உடை பெல்ட் அணிதல்
★ குறிப்பிட்ட நேரத்தில் மலங்கழிக்கப் பழகாதிருத்தல்

ஆகாவாம்.



திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுரவாதீன மகா சந்நிதானம் அவர்கள் ஆறு கிரகங்கள் சேர்ந்து நிற்கிற இவ்வேளையில் 11-9-79 செவ்வாய்க்கிழமை இரவு பதினெரு மணிவரை நாள் தோறும் கோளறு பதிகம் தட்சிணுமூர்த்தி திருவருட்பா முதலியன ஓதி ஆலய வழிபாடு செய்தல் மிகவும் நல்லது என்று திருவாய் மலர்ந்துள்ளார்கள்.

★ தன் பெருமையை விளம்புதல் அருவருப்பான செயல் ★

# நீம் சோப்

## NEEM BATH SOAP




மில்க்வைற் தயாரிப்புக்களில் ஒன்ருன

## நீம் சோப்

நீராடும்போது உபயோகிக்கத் தயாரிக்கப்பட்டது
சுத்தமான வேப்பெண்ணெய்
கலந்து செய்யப்பட்டதால் தேக
ஆரோக்கியத்துக்கு அருமையானது.
நுரைவளம் உள்ள

## நீம் சோப்

தோலில் அழுக்குகளை நீக்குவதோடு
தேமல், சொறி முதலியனவற்றையும் நீக்குவது,
நறுமணம் உள்ளது.


## நவராத்திரி விழா



பாடசாலை அதிபர்கள்
கவனத்திற்கு !

வழக்கம்போல் இம்முறையும்
நாங்கள்

- அரிச்சுவடி ஏடுகள்
- சரஸ்வதி படம்
- சகலகலாவல்லி மாலை

ஆகியவைகளை

இலவசமாகக் கொடுக்கிருேம். பொறுப்புவாய்ந்த ஆசிரியரிடம் விண்ணப்பங்களைக் கொடுத்தனுப்புங்கள். எமக்குத் தபாற்செலவைக் குறைப்பதற்கான வழிவகைகளைக் கையாளுங்கள்.

# விசுவாமித்திரர் படைப்பு

தாவரவுலகிலும், வேறு உயிரினங்களிலும் ஒன்றுக்கொன்று போலியாகவுள்ளன. துளசிச்செடி போலவும், கருகப்பிலை போலவும் இரண்டாம் படைப்புக்கள் உள்ளன. இவற்றை விசுவாமித்திரர் படைப்பு என்பார்கள்.

இவை அசலின் மாதிரியில் அமைந்த நகல் என்று உற்றுப்பார்த்து அறியலாம். சில சமயம் கயிறு, வைக்கோற்புரி பாம்பு மாதிரித் தோன்றிஞல் அவை திரிபுக் காட்சி.

ஆனுல் மனிதன் தயாரிப்பதிலும் செப்படிவித்தைகள் உண்டு. ஐம்பத்திரண்டு ஆண்டுகள் உங்கள் அபிமானத்தைப் பெற்ற எங்கள்

மில்க்வைற் சோப்பின் மேலுறையின் தத்ருபத்தில்
வேருெரு மேலுறை உலாவுகிறது.

அதுவும் வேறு பெயர் கிடையாமல் மில்க் என்றே தொடங்கி வைற் என்னும் சத்தத்தில் இன்ஞெரு சத்தம் வர அமைந்துள்ளது. எழுத்துக்கள், நெழிவுகள், கோடுகள், மடிப்புக்கள் எல்லாவற்றையும் விசுவாமித்திரர் படைக்கவில்லை. மனிதனே படைத்தார். ஆனுல் நீங்கள்

## மில்க்வைற் VMK

என்பவற்றைக் கூர்ந்து பார்த்து வாங்குங்கள்.
கயிறு பாம்புபோலத் தெரியும்.


வெளிவந்துவிட்டது!

# இந்து நாகரிகம்

முதலாம் பாகம் முதற்பகுதி
பதிஞென்ரும் பன்னிரண்டாம் வகுப்புகள் முதல்
உயர்தர வகுப்புகளுக்குரியது

[ இந்து நாகரிகத்தின் வரலாற்று இயற்காட்சி, இந்து நதிக்கலாசாரம்; வேதங்களிலும் ஆகமங்களிலும் காணப்படும் நாகரிகம்; இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் ஆகியவற்றிற் காணப்படும் மரபுகள்; இந்துசமயதின் பல்வகைச் சமய வழிபாட்டு நெறிகள் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணுபத்தியம், சௌரம் ]

விரிவான ஆராய்ச்சி

பக்கங்கள் 224 விலை ரூபா 12-00

ஆக்கியோன்:
''மில்க்வைற் செய்தி'' ஆசிரியர்
க. சி. குலரத்தினம்

வெளியிடுவோர்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேயன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-9-79.